Daily Thanthi

Dated: 27-01-2025

ஈரோடு கிழக்கு தொகுதியில் அனுமதியின்றி பிரசாரம்:

# சீமான் மீது ஒரே நாளில் 4 வழக்குகள் பதிவு



ஈரோடு, ஜன.27-

ஈரோடு கிழக்கு தொகுதியில் அனுமதியின்றி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டதாக நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மீது ஒரே நாளில் 4 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## தேர்தல் பிரசாரம்

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வருகிற 5-ந்தேதி நடைபெற உள்ளது. இதில் நாம் தமிழர் கட்சி சார்பில் வேட்பாளர் சீதாலட்சுமி போட்டியிடுகிறார். இவரை ஆதரித்து கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஈரோட்டில் முகாமிட்டு தேர்தல் பிரசாரம் செய்து வருகிறார். 2-ம் நாளான நேற்று முன்தினம் ஈரோடு காளைமாட்டு சிலை அருகே பிரசாரத்தை தொடங்கி மரப்பாலம், கச்சேரி ரோடு, மண்டபம் வீதி உள்ளிட்ட பகுதிகளில் தெருமுனை கூட்டங்களில் பேசினார்.

இந்த நிலையில் தேர்தல் அதிகாரியிடம் அனுமதி பெறாமல் பிரசாரத்தில் ஈடுபட்டதாக சீமான் உள்ளிட்ட நிர்வாகிகள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளன. அதன்படி காளைமாட்டு சிலை அருகே பிரசாரம் செய்ததற்காக சீமான், வேட்பாளர் சீதாலட்சுமி உள்ளிட்ட 35 பேர் மீது தேர்தல் விதிமீறல், அதிகாரிகளை பணி செய்ய விடாமல் தடுத்தல் ஆகிய 2 பிரிவுகளின் கீழ் ஈரோடு சூரம்பட்டி போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

## சட்டவிரோதமாக கூடுதல்

இதேபோல் மரப்பாலம் மற்றும் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவனின் வீடு அருகே மண்டபம் வீதி ஆகிய இடங்களில் அனுமதி பெறாமல் பிரசாரம் செய்தல், சட்டவிரோதமாக கூடுதல் உள்ளிட்ட 3 பிரிவுகளின் கீழ் சீமான் மற்றும் கட்சி நிர்வாகிகள் மீது ஈரோடு டவுன் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

மேலும் ஈரோடு பெரியார் நகரில் அனுமதி இன்றி பிரசாரம் செய்ததற்காக சீமான் உள்ளிட்ட 3 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் ஒரே நாளில் தேர்தல் விதி மீறியதாக சீமான் மற்றும் நாம் தமிழர் கட்சியினர் மீது ஒரே நாளில் 4 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

Daily Thanthi
Dated: 27.01.2025

### தேர்தல் பறக்கும் படையினர்

# அமைச்சர் முத்துசாமி காரில் சோதனை

ஈரோடு, ஜன.27-

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வருகிற 5-ந்தேதி நடக்கிறது. இதை முன்னிட்டு கிழக்கு தொகுதியில் தி.மு.க. மற்றும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். தொகுதியில் தேர்தலை அமைதியாகவும் பாதுகாப்பாகவும் நடத்த தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுத்து வருகிறது. ரூ.50 ஆயிரத்துக்கும் அதிகமாக உரிய ஆவணங்கள் இன்றி ரொக்கப்பணம் கொண்டுசெல்வது சோதனையில் தெரியவந்தால் பணம் பறிமுதல் செய்யப்பட்டு வருகிறது. இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு ஈரோடு காந்திஜி ரோடு பெரியார் நகர் நுழைவுவாயில் பகுதியில் பறக்கும் படையினர் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அமைச்சர் முத்துசாமியின் கார் அந்த வழியாக வந்தது. அதனை தடுத்து நிறுத்திய பறக்கும் படையினர் காரை சோதனையிட்டனர். ஆனால் காரில் அமைச்சர் இல்லை. முழுமையான சோதனைக்கு பின்னர் கார் தொடர்ந்து செல்ல அனுமதித்தனர்.